1981 ஏப்ரல் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப்பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒழுங்குப் பிரச்சினை.

(அ) மன்ற உறுப்பினர் அந்நிய நாட்டின் தூதுவர் பணியை ஏற்றல்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். நேற்று முன்தினம் இதே அவையில் தங்களுடைய கவனத்திற்கு ஒரு பிரச்னையைக் கொண்டு வந்தேன். * * * *

(முற்பகல் 10-00)

THIRU V. KRISHNAMURTHY: Sir, he should not be permittd to raise it in the House.

(கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றையதினம் என்னிடத்திலே ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் மாதிரி பல கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் கொடுத்தார்கள். அதை இங்கே எழுப்பினாலும் அதுபற்றி தீர்ப்பளிக்க எந்த விதமான அதிகாரமும் எனக்கு இல்லை. ஏனென்றால் இது இங்குள்ள உறுப்பினர் பற்றிய பிரச்சினை. அதுபற்றித் தீர்ப்புக் கூறுகின்ற இடத்திலே நான் இல்லை. என்னால் தீர்ப்புக் கூறவும் முடியாது. ஆனால் இதைப் பற்றி என்ன கருதுகிறீர்கள் என்பதை மட்டும் சொல்லலாம் என்று சொன்னேன். நான் ஒன்றும் இதிலே கருத்து சொல்வதற்கில்லை. அரசின் தரப்பிலும் இதற்குப் பொறுப்பு இல்லை.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் தீர்ப்புக்குப் பின்னால் அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றி . . . . (குறுக்கீடு) இது குறித்து நானும், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். ஆண்டித்தேவர் அவர்களும், திரு. அழகர்சாமி அவர்களும் . . . (கூச்சல், குழப்பம்).

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1981 ஏப்ரல் 25

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்களும் மற்றும் பல கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் ஒரு ஐயப்பாட்டைக் கிளப்பி இருக்கிறார்கள். ஆனால் அந்த ஐயப்பாடு இங்கே உறுப்பினராக இருக்கின்ற ஒருவரைப் பற்றியது. அவர் ஒரு குறிப்பிட்ட பொறுப்பினை ஏற்றுக்கொண்டு இருப்பதன் காரணமாக அரசியல் அமைப்புச் சட்டத்தினுடைய விதிகளிலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற விதிகளின்படி அவர் இங்கே தொடர்ந்து உறுப்பினராக இருக்கலாமா இருக்கக் கூடாதா என்ற அளவுக்கு ஐயப்பாடு வந்திருக்கிறது. ஆனால் அது பற்றி முடிவு செய்ய வேண்டிய பொறுப்பு அவைத் தலைவருக்கு இல்லை. அதுபற்றிய முடிவினைச் செய்ய வேண்டியவர் ஆளுநர் அவர்கள்தான். ஆளுநர் அவர்களுக்கே ஐயப்பாடு இருக்குமேயானால் எலக்ஷன் கமிஷனரிடத்திலே தான் கேட்கவேண்டும். ஆனால் இங்கே ஐயப்பாடு எழுப்புவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. ஆனால் அந்த ஐயப்பாடு பற்றி ஆளுநர் அவர்களுக்கு அனுப்புவதற்கு முன்பாக குறிப்பிட்ட உறுப்பினர் அவர்களின் கருத்தையும் கேட்க வேண்டும் மாண்புமிகு அவைத் தலைவர் அவர்கள். அவர்கள் இங்கே இருந்திருப்பார்களேயானால் அது குறித்துச் சொல்லி இருப்பார்கள். அந்த வகையிலே பொறுப்பு ஏற்றுக் கொண்டது அரசியல் சட்டத்தின் அமைப்பு விதிகளுக்கு உட்பட்டு இருக்கின்றதா? அல்லது வெளிப்பட்டு இருக்கின்றதா? என்பது பற்றி குறிப்பிட்ட உறுப்பினர் அவர்கள் விளக்கம் கொடுத்ததற்குப் பிறகுதான் இதுகுறித்து ஆளுநர் அவர்களுக்கு அனுப்பவேண்டும் என்ற முடிவினைத் தாங்கள் எடுக்க வேண்டும். மேலும் இப்போது விளக்கங்கள் சொல்வதிலே வேறு வகைக்குப் போகாமல் அது ஒரு ஐயப்பாடு என்ற அளவுக்குத்தான் சொல்லப்பட வேண்டுமே தவிர ஏதேனும் குற்றச்சாட்டுகளைச் சொல்கின்ற அளவுக்கு போகக்கூடாது. மேலும் இதுகுறித்து ஒரு முடிவு ஏற்படுகின்ற வரையில் அவர் இங்கே உறுப்பினராகத்தான் இருப்பார். ஆகவே இது குறித்து விளக்கங்கள் தருகின்றபோது குற்றச்சாட்டு என்ற அளவுக்கு இல்லாமல் ஐயப்பாடு என்ற அளவுக்குத்தான் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்னையைப் பற்றி மாண்புமிகு முன்னவர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் எல்லாம் உட்கார வேண்டும். உட்கார்ந்தால்தான் நான் என்னுடைய கருத்தைச் சொல்ல முடியும். தயவுசெய்து யாரும் உணர்ச்சி வசப்படாதீர்கள் (கூச்சல், குழப்பம்).

1981 ஏப்ரல் 25]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கும், மற்றவர்களுக்கும் ஒன்றை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது சட்டப் பிரச்னை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உரிமையை இந்த அவையில் யாரும் முடிவு செய்து நீக்கிவிட முடியாது. சட்டப் பிரச்னையில் என்ன நியாயம் இருக்கிறதோ, அந்த நியாயத்தைப் பெற முழு உரிமையும் உறுப்பினர் அவர்களுக்கு இருக்கிறது. தீர்மானம் கொண்டு வந்த உறுப்பினர் அவர் தரப்பை விளக்கிருக்கிறார். பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் வேண்டுமானால் சம்பந்தப்பட்ட உறுப்பினரிடத்தில் விளக்கங்கள் கேட்கலாம். குறிப்பிட்ட உறுப்பினருடைய கருத்தை அறிந்த பிறகு, இந்த ஐயப்பாட்டை பற்றி ஆளுநருக்கு அனுப்பலாமா என்பது குறித்து, தாங்கள் முடிவு செய்யலாமே தவிர, வேறு எந்த நடவடிக்கையையும் இந்த அவை எடுக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் (கூச்சல், குழப்பம்).

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, நீங்கள் இதை எக்சாமின் பண்ண சம்பந்தப்பட்ட உறுப்பினர் * * அவர்களை தம் கருத்தை எழுதி அனுப்பச் சொல்லுங்கள். அதற்குப் பிறகு எடுக்கலாம் (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி அவரவர்களுடைய கருத்தை வெளியுறுத்துகிற நிலையிலேயே இருந்தால், இந்தப் பிரச்னையில் எந்த முடிவையும் எடுக்க இயலாது. ஆகவே, இந்தப் பிரச்னையைப் பற்றி ஒரு முடிவினை எடுக்க தாங்கள் அலுவல் ஆய்வுக் குழுவினைக் கூட்டி, தலைவர்களை வைத்து, எல்லோரும் சேர்ந்து ஒரு முடிவினை எடுக்கும் வகையில் கொண்டு வரலாம். இல்லாவிட்டால் எந்த முடிவும் வராது. இதற்கு முன் உதாரணமும் இல்லை. ஆகவே, அலுவல் ஆய்வுக்குழுவைக் கூட்டி முடிவு செய்யலாம். ஒரு உறுப்பினர் இன்னொரு உறுப்பினரைப் பற்றி ஐயப்பாட்டை எழுப்பியிருக்கிறார். (குறுக்கீடு) உங்களுக்கு தெரிந்தால் விளக்கங்களை நீங்கள் சொல்லுங்கள். அல்லது உறுப்பினர் இருக்கும்போது இதை எழுப்பி அவரே விளக்கம் அளிக்கட்டும். (கூச்சல், குழப்பம்).

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1981 ஏப்ரல் 25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து எல்லோரும் கொஞ்சம் அமைதியாக இருங்கள். என்னுடைய எண்ணத்தை தெரிவிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் அவர்கள் வேறு ஒரு உறுப்பினரைப் பற்றி ஐயப்பாட்டைக் கிளப்பி பிரச்னையை கொண்டு வந்திருக்கிறார்கள். அதைப்பற்றி ஒவ்வொருவரும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறார்கள். (கூச்சல், குழப்பம்).

(முற்பகல் 10-10)

திரு. ரா. உமாநாத்: அதிகாரம் இருக்கிறது என்பது எங்கள் கருத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதைப் பற்றி நிறைய உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். எல்லோருக்கும் ஒவ்வொரு எண்ணம் இருக்கும். எல்லோரும் எழுதியனுப்புங்கள். அதைப் பரிசீலனை செய்து அதற்குப் பிறகு நான் முடிவு சொல்கிறேன். (கூச்சல், குழப்பம்). காரண காரியங்களை பூராவும் எழுதி அனுப்புங்கள். (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்களுக்கு இந்த ஐயப்பாடு இருக்கிறது என்று முதலில் குறிப்பிட்டேன். அதை எழுதி—அவைத் தலைவர் அவர்கள் கூறியபடி—கொடுக்கட்டும். எந்த வகையில் அவர்கள் மறுக்கிறார்கள் என்று எழுதிக் கொடுத்ததற்குப் பிறகு—உரிய உறுப்பினர்கள் எழுதிக் கொடுக்கட்டும்—அதை ஆராய்ந்து பிறகு அதைப் பற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் இருந்தால் 27-ம் தேதி அன்று எடுத்துக்கொள்ளலாம். இரண்டு பேர்களிடமிருந்தும் விளக்கங்கள் பெற்று விவாதிப்பதற்கு இடமளிக்கலாம். (கூச்சல், குழப்பம்.)

திரு. குமரி அனந்தன்: தலைவர் அவர்களே, . . .

திரு. துரைமுருகன்: என்ன விஷயம் என்றே தெரியவில்லை. (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் விஷயம் என்ன என்று தெரிந்து கொள்ள விரும்புகிறார்கள். என்ன விஷயம் என்பதைத்தான்—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னமாதிரி அவரவர்கள் எழுதிக் கொடுக்க வேண்டும். பிறகு விவாதிக்க வேண்டிய அவசியம் இருந்தால் அதற்குப் பிறகு ஒரு நாள் ஒதுக்கி இரண்டு தரப்பினரும் பேசலாம். ஆகவே இந்த அளவோடு

முடித்துவிட்டு, அவரவர்கள் எழுதிக் கொடுத்த பிறகு அவசியம் இருந்தால்—முடிவு செய்ய வேண்டியது தாங்களே தவிர இங்கே இருக்கிறவர்கள் கொண்டு வரவேண்டும் என்று சொல்வதும், கொண்டுவரக்கூடாது என்று சொல்வதும் தேவையற்றது. முடிவு எடுக்க வேண்டிய பொறுப்பு தங்களிடம்தான் இருக்கிறது. அவர்கள் எழுதிக் கொடுக்கட்டும். சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் பதில் சொல்லட்டும். பிறகு அவசியப்பட்டால் விவாதித்து எடுக்கவேண்டிய முடிவை எடுத்துக்கொள்ளலாம்.

திரு. குமரி அனந்தன்: * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. குமரி அனந்தன், உணர்ச்சி வசப்படக் கூடாது. இதையெல்லாம் அவைக் குறிப்பிலே ஏற்றாதீர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையைப் பொறுத்தவரையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் உணர்ச்சிவசப்பட்டு பேச வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே பேசுவதன் காரணமாக, இந்தப் பிரச்னை எந்த வகையிலும் தீர்ந்துவிடப் போவதில்லை. இன்றே எடுத்துக்கொண்டு தீர்க்க வேண்டிய பிரச்னையும் அல்ல. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் அவர்கள், இன்றுள்ள நிலைமைக்கு ஏற்ப, தம்முடைய கருத்தை பேரவைத் தலைவருக்கு எழுத்துமூலம் எழுதித் தரலாம். அதற்கு உரியவர்களிடம் இருந்தும் கருத்தை அறிந்து, இந்த இரண்டையும் ஆராய்ந்து, தேவைப்பட்டால் இங்கே திரும்பவும் பேசுவதற்கான வாய்ப்பு ஏற்படும். இந்தப் பிரச்னையில் முடிவெடுக்க வேண்டிய நிலையில் நாம் இல்லை அரசும் முடிவெடுக்க ஒன்றுமில்லை. இந்த அளவிலே இந்தப் பிரச்சினையை முடித்துக் கொள்ளலாம்.

டாக்டர் மு. கருணாநிதி: இந்தப் பிரச்னைக்கு தாங்கள் அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவு எடுத்துக் கொள்ளலாம்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: முடியாது, பேரவைத் தலைவர்தான் அனுமதி கொடுத்தார்கள். (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எனக்கிருக்கிற ஒரே அதிகாரம் அனுமதிப்பதும், அனுமதிக்கப்பட்டதைத் திரும்பப் பெறுவதும் தான். கொடுத்த அனுமதியைத் திரும்பப் பெற்று விட்டேன் என்று சொல்லி விட்டேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஆகவே, தயவு செய்து உங்கள் கருத்தை எழுதிக் கொடுத்து விடுங்கள். இந்தப் பிரச்சினையைப் பற்றி நான் சம்பந்தப்பட்ட உறுப்பினரிடத்தில் பதில் வாங்கி, அதற்குப் பிறகு என்ன செய்யலாம் என முடிவு செய்கிறேன். அவை முன்னவர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் சொன்னதைப் போல், இந்தப் பிரச்னையை அலுவல் ஆய்வுக் குழுவிலே விவாதித்து முடிவு செய்யலாம். (கூச்சல், குழப்பம்). எல்லோரும் உட்காருங்கள். இன்னும் கால் மணி நேரத்தில் அலுவல் ஆய்வுக் குழுவை கூட்டுவதாக இருக்கிறேன். அங்கே இதுபற்றி தலைவர்கள் அனைவரையும் கலந்து முடிவெடுக்கிறேன்.

(முற்பகல் 10-20)

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். . (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டி முடிவெடுக்கிறேன். இதுபற்றி பாயிண்ட் ஆப் ஆர்டர் என்னுடைய அனுமதி இல்லாமல் எழுப்ப முடியாது.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டருக்கு அனுமதி கிடையாதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயிண்ட் ஆப் ஆர்டருக்கு அனுமதி உண்டு. அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டுகிறேன். அங்கே பேசலாம். (கூச்சல், குழப்பம்). இப்போது எல்லோரும் அமைதியாக உட்காருங்கள்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர் அனுமதிக்கவில்லை என்பதால் எங்களுடைய உரிமை பாதிக்கப்படுகிறது, தடுக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய உரிமையை யாரும் தடுக்கவில்லை, உட்காருங்கள். நீங்கள் எப்போது வேண்டுமானாலும் பேசலாம். (கூச்சல், குழப்பம்)

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவரவர்களே, நீங்கள் எப்படி இவைகளை அனுமதிக்கிறீர்கள் (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டி முடிவெடுக்கிறேன் என்று சொல்கிறேன். கூட்டக் கூடாது என்கிறீர்களா ? என்ன சொல்கிறீர்கள் ? சபையை நடத்துவதா, இல்லையா ? அமைதியாக எல்லோரும் உட்காருங்கள்.

1981 ஏப்ரல் 25]

திரு. குமரி அனந்தன்: தலைவரவர்களே, எங்களுடைய உரிமை பறிக்கப் படுகிறதென்பதால், வேதனையான நிலையில் நாங்கள் வெளி நடப்புச் செய்கி றோம்.

(காந்தி—காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தனர்)

திரு. ரா. உமாநாத்: தலைவரர்களே, ஒரு சீரியஸ் பிரச்சினை. மெம்பர் களுடைய பாயிண்ட் ஆப் ஆர்டர் என்ற ரைட் * * (கூச்சல், குழப்பம்).

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவரவர்களே, நீங்கள் எப்படி இதை அனுமதிக்கிறீர்கள். என்னையும் ஒரு கருத்தைச் சொல்ல அனுமதிக்க வேண்டும்.

திரு. வெ. இராஜசேகரன்: தலைவரவர்களே, உங்களால் தீர்ப்புக் கூற முடியாத விஷயத்தை சபையில் பேசுவதற்கு அனுமதிக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்).

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, எங்களுடைய உரிமை பாதிக்கப் படுகிறதாலே, எங்களது அதிருப்தியை நாங்கள் தெரிவித்து, ஆட்சேபித்து வெளிநடப்புச் செய்கிறோம்.

(கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).

திரு. இரா. கருப்பையா: தலைவரவர்களே, இந்த பேரவையிலே அங்கத் தினர்கள் எழுப்ப வேண்டிய உரிமைப் பிரச்சினைகளை * * நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

(கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

திரு. எஸ். ஆண்டித்தேவர்: தலைவர் அவர்களே, * * (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அனுமதி கொடுக்கலாம், அதைத் திரும்பப் பெறவும் எனக்கு உரிமை இருக்கிறது. அனுமதி கொடுத்ததை மட்டும் ஏற்றுக்கொள்கிறீர்கள், அனுமதியை நான் திரும்பப் பெற்றுக்கொண் டதை மட்டும் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்கிறீர்களே என்ன அர்த்தம்?

திரு. எஸ். ஆண்டித்தேவர்: அனுமதி கொடுத்தீர்கள். * *

(அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியினர் வெளிநடப்புச் செய்தனர்).

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கேற்ப அகற்றப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. க. பாரமலை: தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள், இந்த அவையிலே அதுபற்றி முடிவு எடுக்க முடியாது என்று; இருந்தாலும் உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லலாம் என்ற நிலையிலே சொல்கிறபோது * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெளியே போவதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. எழுதித் தரவேண்டுமென்று சொன்னது உரிமை மறுக்கப் பட்டதல்ல. ஒரு உறுப்பினருக்கு பைத்தியம் பிடித்துவிட்டது என்று இன்னொரு உறுப்பினர் குற்றஞ்சாட்டினால் அது சரியா தவறா என்று நான் முடிவு எடுத்துவிட முடியாது. இது ஒரு உறுப்பினருடைய பிரச்சினை. ஆகவேதான் அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டி எல்லாத் தரப்பினரையும் அழைத்துக் கேட்போம் என்று சொன்னேன். அதுவும் முடியாது என்று சொன்னால் என்ன செய்வது?

திரு. க. பாரமலை: நேற்றே எழுத்து மூலமாக எழுதிக் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதற்கேற்ப அனுமதி இங்கே கொடுக்கப்பட்டது. * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எழுத்துமூலமாக ஒத்திவைப்புத் தீர்மானம் என்று கொடுத்திருக்கிறீர்கள். அதை ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்வதற்கு எந்தச் சட்டமும் அனுமதிக்கவில்லை. ஆகவே தான் முடியாது என்று சொன்னேன். வேறு ஏதாவது முறையிலே கொண்டுவர லாம் என்று கருதி ஒழுங்குப் பிரச்சினையில் கொண்டுவருவதாகச் சொன் னார்கள். அதன் மீதும் பிரச்சினை எழுந்தபோதுதான் அவை முன்னவர் அவர்கள் தலையிட்டு எழுதிக் கொடுக்கலாம் என்ற முடிவுக்கு வந்தார்கள். ஆனால் அதிலேயும் பிரச்சினை வந்தது. பிறகு அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டி முடிவு செய்யலாம் என்று தெரிவித்தபோது அதுவும் முடியாது என்று சொன்னால் என்ன செய்ய முடியும்?

திரு. க. பாரமலை: * *

(தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சியினர் வெளிநடப்புச் செய்தனர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒழுங்குப் பிரச்சினை, வெளிநடப்பு பிரச்சினை என்பதையொட்டி விவாதம் எழுந்தபோது நான் இங்கே குறிப்பிட வேண்டாம் என்று சொன்ன கருத்துக்களைச் சிலர் குறிப்பிட்டுள்ளார்கள். அவை அனைத்தும் பேரவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற ஆணையிடுகிறேன்.

---

* *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.